# <u>Sub Court, Eraniel</u>

O.S. No.86/2021
Date: 25.02.2026.
DW1- திரு. இளங்கோ

சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் விசாரிக்கப்பட்டார்.
<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

எனது தாயார் றோஸ்லெட் ஆசிரியராக இருந்து ஓய்வு பெற்றவர் என்றால், சரிதான். தற்போது என்னிடம் காட்டப்படும் கடன் உறுதி சீட்டு வா.சா.ஆ.2 ஆவணத்தில் உள்ள கையொப்பம் எனது தாயாருடையது அல்ல. எனது தாயார் ஆங்கிலத்தில் கையொப்பம் செய்வார். எனது தாயார் தமிழில் கையொப்பம் செய்திருக்கலாம், எனக்கு அது பற்றி சரியாக தெரியாது. எனது முதல் விசாரணையில் ஜெயக்குமார் அலைப்பேசியில் பேசியதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால், சரிதான். அதில் எந்த இடத்திலும் வாதியின் பெயர் ரவீந்தரன் என்று குறிப்பு காணப்படவில்லை என்றால், சரியல்ல. நான் குறிப்பிடும் கைப்பேசி உரையாடலுக்கும், வாதிக்கும் எந்த சம்பந்தமும் கிடையாது என்றாலும், அவ்வாறு சம்பந்தம் இருப்பதாக நான் முதல் விசாரணையில் குறிப்பிடவில்லை என்றால், சரியல்ல. மண்டைக்காடு காவல் நிலையத்தில் வாதி மீதும், சாட்சி மீதும் புகார் கொடுத்ததாக குறிப்பிட்டுள்ளேன். அந்த புகாரின் அடிப்படையில், அவர்களை விசாரித்து வழக்கு நீதிமன்றத்தில் இருப்பதால், நீதிமன்றத்தில் பரிகாரம் பெற்றுக் கொள்ள சொன்னார்கள். புகாரின் அடிப்படையில் வாதியை கூப்பிட்டு விசாரித்தார்கள். வாதியை இந்த புகாரின் அடிப்படையில் மண்டைக்காடு காவல் நிலையத்தில் அழைத்து விசாரிக்கவில்லை என்றால், சரியல்ல. எனது பெயரிலும், எனது தகப்பனார் பெயரிலும், மண்டைக்காடு காவல் நிலையத்தில் எனது தாயார் கடன் வாங்கியதாக எந்த புகாரும் தரப்படவில்லை. நானும் புகார் தரவில்லை. தற்போது என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ.4 அசல் ஆவணம் என்றால், சரிதான். நான் காவல் நிலையத்தில் பி.வா.சா.ஆ.4 ஆவணத்தை தாக்கல் செய்திருந்தால், அசல் என்னிடம் இருக்காது என்றால், அது Online ல் கொடுத்த புகார். பி.வா.சா.ஆ.5 ஆனது பி.வா.சா.ஆ.4 புகாரை பெற்றுக் கொண்டதற்கான மனு இரசீது என்றால், சரிதான். பி.வா.சா.ஆ.5 ல் புகார் எழுத்து மூலமாக கொடுக்கப்பட்டதாகவும், online ல் கொடுத்ததாக குறிப்பு இல்லை என்றால், Online ல் தான் கொடுக்கப்பட்டது. பி.வா.சா.ஆ.5 ல் பணம் கொடுக்கல் வாங்கல் சம்பந்தமாக புகார் கொடுத்தாக எந்த குறிப்பும் இல்லை என்றால், சரிதான். அது போலி பத்திரம் குறித்தது. பி.வா.சா.ஆ.5

வழக்கிற்கு சம்பந்தம் இல்லாத போலியான ஆவணம் என்றால், சரியல்ல. வழக்கு பட்டிகை சொத்து எனது தாயார் விலைக்கு வாங்கியது என்றால், சரிதான். விலைக்கு வாங்கிய 10.500 சென்டில் 7 சென்ட் சொத்து மற்றும் அதில் இருந்த வீட்டையும், பி.வா.சா.ஆ.6ன் படி எனக்கு எனது தாயார் செட்டில்மென்ட் எழுதி வைத்தார் என்றால், சரிதான். பி.வா.சா.ஆ.6ன் படி எந்த வித பணப்பரிமாற்றமும் நடைபெறவில்லை என்றால், சரியல்ல. நான் பணம் கொடுத்திருக்கிறேன். சொத்தின் உரிமை மாற்றத்திற்கு, எனது தாயாருக்கு தேவையான சுமார் ரூ.25,00,000/– கொடுத்திருக்கிறேன். பி.வா.சா.ஆ.6 உரிமை மாற்றத்திற்கு பணம் கொடுத்ததாக அந்த ஆவணத்தில் துலங்காது என்றால், சரிதான். அவ்வாறு ரூ.25,00,000/– கொடுத்ததற்கு வேறு ஆவணங்கள் கிடையாது என்றால், சரியல்ல. அது வங்கி பணப்பரிமாற்றம் ஆகும். அது பற்றிய ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யலாம். வழக்கு பட்டிகை சொத்திற்கு ரூ.25,00,000/– கொடுத்திருந்தால் நான் கிரய ஆவணம் எழுதி வாங்கியிருப்பேன் என்றாலும், நான் வழக்கிற்காக அவ்வாறு தவறுதலாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், சரியல்ல. அவ்வாறு ரூ.25,00,000/– கொடுத்ததாக நான் எனது எதிர் வழக்குரையிலோ, முதல் விசாரணை சாட்சியத்திலோ குறிப்பிடவில்லை என்றால், சரிதான். எனது 7 சென்ட் போக மீதி 3.500 சென்ட் இடத்தை எனது தாயார் எனது சகோதரி மாதினிக்கு செட்டில்மென்ட் எழுதி கொடுத்தார் என்றால், சரிதான். மாதினியிடம் இருந்து நான் அந்த 3.500 சென்டினை பி.வா.சா.ஆ.7ன் படி கிரயம் வாங்கினேன் என்றால், சரிதான். எனது தாயார் வாங்கின 10.500 சென்ட் சொத்து எனது கைவசம் அனுபவத்தில் உள்ளது என்றால், 2012 முதல் எனது அனுபவத்தில் உள்ளது. பி.வா.சா.ஆ.7 ஆவணப்படியான சொத்து எனது சகோதரியிடம் இருந்து நான் கிரயத் தொகை கொடுத்து விலைக்கு வாங்கி இருக்கிறேன் என்றால், சரிதான். பி.வா.சா.ஆ.6 படி கிரயத் தொகை கொடுக்காததால் செட்டில்மென்ட் எழுதி வாங்கினேன் என்றால், சரியல்ல. எனது சகோதரிகளின் திருமணத்திற்கு என்று பணம் கொடுத்தேன். வாதிக்கு வழக்கில் கோரியுள்ள தொகையை கொடுக்க கூடாது என்று நான் தவறுதலாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல. வா.சா.ஆ.2 கடன் உறுதி சீட்டில் உள்ள கையொப்பம் எனது தாயாரின் கையொப்பம் என்று உறுதி செய்யப்பட்டால், வழக்கு பட்டிகை சொத்தில் இருந்து அந்த தொகையை ஈடு செய்ய எனக்கு ஆட்சேபனை இருக்க முடியாது என்றால், அது எனது தாயாரின் கையொப்பம் கிடையாது. எனது தாயாரின் கையொப்பத்தை நிபுணரின் பரிசோதனைக்கு அனுப்ப எனக்கு ஆட்சேபனை இல்லை என்றால்,

**சரிதான். நான் உண்மைக்கு புறம்பாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து சரியென ஒப்புக்கொண்டு என் முன்னிலையில் கையெழுத்துச் செய்தார்.

சார்பு நீதிபதி,
இரணியல்.